1968 மார்ச் 8]

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இவைகள் பற்றி மானய கோரிக்கை விவாதத்தின்போது சொல்வார்களானால் அதைக் குறிப்பெடுத்து கவனிக்க எதுவாக இருக்கும்.

திரு. வி. டி. அண்ணாமலை : 37 குளங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வட ஆர்க்காடு மாவட்டத்தில் அவற்றில் எவ்வளவு இடம் பெறுகின்றன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு என்று கேட்பார்கள். ஆகவே இருப்பதைச் சொல்லிவிடுகிறேன்.

தென்னார்க்காடு 1 ; திருச்சி 4 ; இராமநாதபுரம் 6 ; தர்மபுரி 8 ; மதுரை 6 ; திருநெல்வேலி 5 ; கோவை 5 ; சேலம் 2 ; ஆக மொத்தம் 37. வட ஆர்க்காட்டில் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளவை 2.

திரு. எஸ். ஜே. ராமசாமி : வட ஆற்காடு மாவட்டத்தில், ஏரிகள் குளங்கள் இரண்டு பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். நீர்த் தேக்கங்களைப் பற்றிய குறிப்பு ஏதாவது இருக்கிறதா ? வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றி ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள நீர்த் தேக்கங்களைப் பற்றிய குறிப்புக்கள் அரசாங்கத்திடம் ஏராளமாக இருக்கின்றன. அவைகளைச் செயல்படுத்தும் முயற்சியும் இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : மைனர் ரிசர்வாயர் என்று சொல்லப்படுவதற்கு எவ்வளவு உச்சவரம்பு செலவழிப்பதாக திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது ? அதற்கு ஏதாவது ஒரு பாலிஸி இருக்கிறதா ? அப்படி இருந்தால் ஒவ்வொரு மாவட்டத்திலும் குளங்கள் இருக்கிறது என்று சொல்லுவதை என்னென்ன குளங்கள் என்பதுபற்றி ஓர் அறிக்கையை இந்தச் சபையில் வைக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது பற்றி வேண்டுமானால் யோசித்து ஓர் அறிக்கையை சட்டசபையில் வைக்க முயற்சிக்கலாம்.

திரு. அ. ஆறுமுகம் : அமைச்சரவர்கள் சேலம் மாவட்டத்தில் இரண்டு நீர்த் தேக்கங்கள் என்று குறிப்பிட்டார்கள். அவை எது எது என்று அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சேலம் என்பது தர்மபுரி மாவட்டத்தையும் சேர்ந்தது—

(1) New tank across Kanar near Thandanurpudur village.

(2) New tank near Bairamaickenpatti village.

ᵃ இந்த இரண்டும்தான்.

உயரமான தடை அணைக்கட்டுகள்

*174 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1962 முதல் 1966 வரை " High Check dams " எங்கெங்கே கட்டப்பட்டுள்ளன, ஜில்லா வாரியாக ?

ᵃ 118-ம் பக்கத்தில் உள்ள அமைச்சரின் விளக்கத்தைக் காண்க.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: வேளாண்மைத் துறையின் நில வள—நீர்வளப் பாதுகாப்பு வேலைத் திட்டத்தின் கீழ், உயரமான தடை அணைக்கட்டுகள் எதுவும் கட்டப்படுவதில்லை. நடுத்தர உயரமுள்ள குறைந்த உயரமுள்ள, தடை அணைக்கட்டுகளே கட்டப்படுகின்றன. பெருந்தடை அணைக்கட்டுகள் என வழங்கப்படுகிற இடைத்தர உயரமுள்ள தடை அணைக் கட்டுகள் எட்டு, 1962 முதல் 1966 வரை மண்வளப் பாதுகாப்பு வேலைத் திட்டத்தின் பகுதியாக வட ஆர்க்காடு மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ளன.

தேவையானபோது, இத்தகைய அணைக்கட்டுகள் இம்மாநிலத்தில் ஏனைய பகுதிகளில் கட்ட எண்ணியுள்ளது.

Colachel–Neerodi Coastal Road

* 175 *Q.*—THIRU A. CHIDAMBARANATHA NADAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state —

(*a*) whether there is any proposal under the consideration of the Government to construct a coastal road from Simon colony at Colachel to Neerodi; and

(*b*) if so, the width of the proposed road?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) & (இ) கொளச்சலி லிருந்து நீரோடை வரை கடலோரச் சாலை அமைப்பதற்கு 1960-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சார், இது ஒரு முக்கியமான வழித் தடமாக இருக்கிற காரணத்தால் மறுபடியும் புனர்பரிசீலனை செய்து, இதைச் செய்ய ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி: 1960-ல் இதற்கு முதல் எஸ்டி மேட் போடும்போது 5 லட்சம் 91 ஆயிரம் செலவில் திட்டமிட்டது. அதன் பிறகு இரண்டாவது ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் 17 லட்சமாக உயர்ந்த காரணத்தால் அன்றிருந்த நிதி நிலையில் அது சாத்தியம் இல்லையென்று தள்ளிவிட்டார்கள். அங்கத்தினர் கூறுகின்ற நிலையில் மீண்டும் அதைப் புனர் பரிசீலனை செய்வதற்கு யோசிக்கலாம்.

திரு. வ. ஜார்ஜ்: இந்தத் திட்டம் நேஷனல் ஹைவேஸ் திட்டத்தின் கீழ் ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசு ஒப்புதலுக்கு உட்பட்டுத் தொடங்கிய ஒன்று என்று நினைக்கிறேன். பிறகு இதை விட்ட காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: உணவு உற்பத்தித் திட்டத் தின் கீழ் இந்த ஏற்பாடு எடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டேன். ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இருக்கும் என்று ஊகித்துச் சொல்வது சரி அல்ல.

Kotagiri as Tourist Centre

* 176 *Q.*—THIRU K. VINAYAKAM, THIRU J. BELLIE GOWDER: Will the Hon. the Minister for Harijan Welfare and Informa-tion be pleased to state—

(*a*) whether there is a proposal to promote and develop Kotagiri in the Nilgiris district as a tourist centre; and

(*b*) if so, the steps taken by the Government to develop the area?